# தரைவழித் தாக்குதலுக்கு தயாராகிறது இஸ்ரேல்

**ஜெருசலேம், அக். 12:** ஹமாஸ் ஆயுதக் குழுவினரை அழிக்கும் வகையில் காஸா மீது தரைவழித் தாக்குதலுக்கு தயாராகி வருவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலில் ஏற்கெனவே காஸா உருக்குலைந்த நிலையில், தரைவழித் தாக்குதலை இஸ்ரேல் ராணுவம் தொடங்கினால், இதுவரை இல்லாத பேரழிவை காஸா சந்திக்கும் நிலை உருவாகியுள்ளது.

**தரைவழித் தாக்குதல்:** ஹமாஸ் அமைப்பினரின்மறைவிடங்களைக் குறிவைத்து வான்வழித் தாக்குதல் நடத்தி வருவதாக இஸ்ரேல் ராணுவம் கூறினாலும், காஸாவில் குடியிருப்புகளும், வழிபாட்டுத் தலங்களும் இஸ்ரேலின் குண்டுமழையால் தரைமட்டமாகி வருகின்றன.

இந்நிலையில், காஸா மீது தரைவழித் தாக்குதலுக்கு இஸ்ரேல் ராணுவம் தயாராகி வருகிறது. இது குறித்து இஸ்ரேல் ராணுவ செய்தித் தொடர்பாளர் ரிச்சர்ட் ஹெக்ட் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறுகையில், ஹமாஸ் அமைப்பினரை அழிக்கும் வகையில் தரைவழித் தாக்குதலுக்கு ராணுவம் தயாராகி வருகிறது. அரசு உத்தரவிட்டால் தாக்குதல் தொடங்கப்படும். இப்போதைக்கு ஹமாஸ் தலைவர்கள் மீது குறிவைத்து வருகிறோம் என்றார்.

40 கி.மீ. நீளம் கொண்ட குறுகிய நிலப்பரப்பான காஸாவில் 23 லட்சம் பேர் வசித்து வருகின்றனர். அங்கு இஸ்ரேல் ராணுவம் தரைவழித் தாக்குதலை நடத்தினால் உயிரிழப்பு மிகவும் அதிகரிக்கும் நிலை உள்ளது.

**தவிக்கும் மக்கள்:** காஸாவின் ஒரே மின் நிலையமும் எரிபொருள் தீர்ந்ததால் புதன்கிழமை மூடப்பட்டது; இதனால், காஸா பகுதி இருளில் மூழ்கியுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தைச் சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், காஸாவில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதால், புதிதாகப் பிறந்த குழந்தைகளை இன்குபேட்டரில் வைப்பதிலும், வயது முதிர்ந்த நோயாளிகளுக்கு செயற்கை சுவாசம் செலுத்துவதிலும் சிரமம் ஏற்பட்டுள்ளது. சிறுநீரக நோயாளிகளுக்கு டயாலிசிஸ் செய்வதும், எக்ஸ்ரே எடுப்பதும் நிறுத்தப்பட்டுள்ளது என்றார்.

## காஸாவில் தொடரும் குண்டுமழை



காஸாவில் உள்ள ரஃபா அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் காயமடைந்தவர்களை மீட்ட மக்கள்.

**தொடரும் தாக்குதல்:** காஸா மீதான இஸ்ரேலின் வான்வழித் தாக்குதல் வியாழக்கிழமையும் தொடர்ந்தது. இதற்கிடையே, மேற்குக் கரையில் ஓர் இறுதிச்சடங்கு நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் மீது இஸ்ரேலிய குடியிருப்பாளர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பாலஸ்தீனர்கள் இருவர் உயிரிழந்ததாக பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் வியாழக்கிழமை தெரிவித்தது.

காஸாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் இதுவரை 1,000 வீடுகள் தரைமட்டமாகியுள்ளதாகவும், 560 வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளதாகவும் ஐ.நா. அலுவலகம் தெரிவித்துள்ளது.

காஸாவில் குடிநீர் விநியோகத்தை இஸ்ரேல் நிறுத்தியுள்ளதால் சுமார் 6.50 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கழிவுநீர் அமைப்புகள் செயலிழந்து தெருக்களுக்குள் கழிவுநீர் புகுந்துள்ளது.

**இதுவரை உயிரிழப்பு:** இஸ்ரேல் தாக்குதலில் காஸாவில் இதுவரை 1,350 பேர் உயிரிழந்துள்ளதாக பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் தாக்குதலில் இஸ்ரேலில் 222 ராணுவ வீரர்கள் உள்பட 1,300 பேர் உயிரிழந்துள்ளதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

இஸ்ரேலுக்குள் ஊடுருவிய 1,500 ஹமாஸ் தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும், காஸாவில் கொல்லப்பட்டவர்களில் நூற்றுக்கணக்கானோர் ஹமாஸ் உறுப்பினர்கள் எனவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

## 'ஆபரேஷன் அஜய்': 230 இந்தியர்கள் இன்று நாடு திரும்புகின்றனர்

**புது தில்லி, அக். 12:** இஸ்ரேலிலிருந்து இந்தியர்களை மீட்கும் 'ஆபரேஷன் அஜய்' திட்டத்தின் கீழ் முதல்கட்டமாக 230 இந்தியர்களுடன் சிறப்பு விமானம் வெள்ளிக்கிழமை (அக். 13) புறப்படுகிறது.

இஸ்ரேலில் சுமார் 18,000 இந்தியர்கள் வசித்து வருகின்றனர். அவர்களை மீட்பதற்காக 'ஆபரேஷன் அஜய்' திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

அதன்படி, இஸ்ரேல்வாழ் இந்தியர்கள் நாடு திரும்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முதல் விமானம், இஸ்ரேலின் பென் குரியோன் சர்வதேச விமான நிலையத்திலிருந்து வெள்ளிக்கிழமை இரவு புறப்படுகிறது.

## சிரியா மீது இஸ்ரேல் தாக்குதல்

**டமாஸ்கஸ், அக். 12:** சிரியாவின் டமாஸ்கஸ், அலெப்போ நகர விமான நிலையங்கள் மீது இஸ்ரேல் வியாழக்கிழமை வான்வழித் தாக்குதல் நடத்தியதாக சிரியா அரசு ஊடகம் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் ஆயுதக் குழு இஸ்ரேலில் தாக்குதல் நடத்தத் தொடங்கிய பின்னர், சிரியா மீது இஸ்ரேல் நடத்தும் முதல் தாக்குதல் இதுவாகும்.

இஸ்ரேல்–பாலஸ்தீன பிரச்னையில் ஹமாஸ் அமைப்புக்கு சிரியா ஆதரவு தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## 'ஹமாஸ் நிகழ்த்தியது பயங்கரவாதத் தாக்குதல்; பாலஸ்தீன இறையாண்மை காக்கப்பட வேண்டும்'

**புது தில்லி, அக். 12:** இஸ்ரேல் நகரங்கள் மீது ஹமாஸ் நிகழ்த்தியது பயங்கரவாதத் தாக்குதல்; அதே நேரத்தில் இறையாண்மையுடன் கூடிய பாலஸ்தீனத்தில் மக்கள் அமைதியாக வாழ வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை என்று இந்தியா கருத்து தெரிவித்துள்ளது.

தில்லியில் வியாழக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த வெளியுறவுத் துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி கூறியதாவது:

பாலஸ்தீனம் குறித்த இந்தியாவின் நிலைப்பாடு எப்போதும் உறுதியாக உள்ளது. பாலஸ்தீனத்தின் இறையாண்மை, சுதந்திரம் காக்கப்பட வேண்டும். அங்கு மக்கள் அமைதியாக வாழ வேண்டும். இரு தரப்புக்கும் இடையே வரையறுக்கப்பட்ட எல்லை உருவாக வேண்டும். இதற்காக இரு தரப்பும் நேரடியாக அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

அதே நேரத்தில் பயங்கரவாதம் எந்த வகையில் தலைதூக்கினாலும் அதற்கு எதிராகப் போராட வேண்டும் என்பது சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விஷயம். இஸ்ரேல் நகரங்கள் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களை பயங்கரவாதத் தாக்குதலாகவே இந்தியா கருதுகிறது என்றார்.

இஸ்ரேலுக்கு இந்தியா உறுதியாக துணை நிற்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி ஏற்கெனவே கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஹமாஸின் பயங்கரவாதத் தாக்குதலே போருக்கு காரணம்: காங்கிரஸ்

**புது தில்லி, அக். 12:** இஸ்ரேல்–காஸா போருக்கு ஹமாஸ் நடத்திய பயங்கரவாதத் தாக்குதலே காரணம் என்பதை மறுக்க முடியாது என காங்கிரஸ் மூத்த தலைவர் ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

அதேவேளையில், இந்த மோதலை நிறுத்துவதே உடனடியாக மேற்கொள்ள வேண்டிய பணி என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் 'எக்ஸ்' சமூக வலைதளத்தில் வியாழக்கிழமை வெளியிட்ட பதிவில், 'இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய பயங்கரவாதத் தாக்குதலே இந்தப் போருக்குக் காரணம் என்பதை மறுக்க முடியாது. காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய பதிலடி தாக்குதல் இந்த மோதலைத் தீவிரப்படுத்தியுள்ளது. பெண்கள், குழந்தைகள் உள்பட நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களும் இந்தத் தாக்குதலில் உயிரிழந்தனர்.

இஸ்ரேல்–காஸா இடையே பல ஆண்டுகளாக நீடிக்கும் பகைக்கு இந்த மோதல் உறுதியாகத் தீர்வு தரப்போவதில்லை. மோதலை நிறுத்துவதே உடனடியாகச் செய்ய வேண்டிய பணி.

இதன் அடிப்படையிலேயே மோதலை நிறுத்துமாறு காங்கிரஸ் சார்பில் அறிக்கை வெளியிடப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மத்திய கிழக்கில் தொடரும் மோதலை முடிவுக்கு கொண்டுவர உலக நாடுகள் ஒன்றிணைந்து வாய்ப்புள்ள அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# பாரிவேந்தர் பைந்தமிழ் விருதுக்கு எழுத்தாளர் சிவசங்கரி தேர்வு

**தாம்பரம், அக். 12:** எஸ்.ஆர்.எம். தமிழ்ப் பேராயம் சார்பில் நிகழாண்டுக்கான பாரிவேந்தர் பைந்தமிழ் விருதுக்கு எழுத்தாளர் சிவசங்கரி தேர்வு செய்யப்பட்டுள்ளதாக எஸ்.ஆர்.எம். குழும பதிவாளர் எஸ். பொன்னுசாமி வியாழக்கிழமை தெரிவித்தார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஓய்வு பெற்ற நீதியரசர் விமலா தலைமையிலான அறிஞர் குழுவினர் இந்த ஆண்டுக்கான தமிழ்ப் பேராயம் விருதாளர்களைத் தேர்வு செய்துள்ளனர். அதன்படி, 'சிலாவம்' நூலை எழுதிய க. தமிழ்ச்செல்விக்கு புதுமைப்பித்தன் படைப்பிலக்கிய விருதும், 'நினைவின் ஆழியில் அலையும் கயல்கள்' நூலை எழுதிய ரவி சுப்பிரமணியனுக்கு பாரதியார் கவிதை விருதும் வழங்கப்படும்.

'பெரிய தாத்தா' நூலை எழுதிய அருண் மற்றும் 'கடலுக்கு அடியில் மர்மம்' நூலை எழுதிய சி. சரிதா ஜோ ஆகியோர் அழ. வள்ளியப்பா குழந்தை இலக்கிய விருதுக்கும், ஜி.யூ. போப் மொழிபெயர்ப்பு விருதுக்கு பாஸ்டியன் பட்டு எம். பூபதி, ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அறிவியல் தமிழ் மற்றும் தொழில்நுட்ப விருதுக்கு 'இதம் தரும் இதயம்' நூலை எழுதிய க. மகுடமுடி, பரிதிமாற்கலைஞர் தமிழ் ஆய்வறிஞர் விருதுக்கு 'தனித்தமிழ் இயக்கம் - ஒரு நூற்றாண்டு வரலாறு' நூலை எழுதிய க. தமிழமல்லன், முத்தமிழறிஞர் கலைஞர் சமூகநீதி விருதுக்கு 'நிலத்தியல்பின் அரசியல்' நூலை எழுதிய சிவ. இளங்கோ ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

சுதேசமித்திரன் தமிழ் இதழ் விருதுக்கு 'மானுடம்' எனும் சமூக அரசியல் பண்பாட்டு காலாண்டு இதழ் தேர்வு செய்யப்பட்டுள்ளது. தொல்காப்பியர் தமிழ்ச்சங்க விருதுக்கு மயிலை திருவள்ளுவர் தமிழ்ச் சங்கம் மற்றும் அருணாசலக் கவிராயர் விருதுக்கு மறத்தமிழன் கலைக்குழு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

பாரிவேந்தர் பைந்தமிழ் விருதுக்கு எழுத்தாளர் சிவசங்கரி தேர்வு செய்யப்பட்டுள்ளார். தேர்வு செய்யப்பட்ட நூலாசிரியர்களுக்கு விருதுடன் தலா ரூ.1 லட்சம் பரிசுத் தொகை வழங்கப்படும். பாரிவேந்தர் பைந்தமிழ் விருது பெறும் எழுத்தாளர் சிவசங்கரிக்கு விருதுடன் ரூ.3 லட்சம் பரிசு வழங்கப்பட உள்ளது என்றார் அவர். தமிழ்ப் பேராயம் தலைவர் கரு.நாகராஜன், செயலர் ஜெய் கணேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

EVA STALIN IAS ACADEMY

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# வரையாடுகளைப் பாதுகாக்கும் முன்னோடித் திட்டம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

**சென்னை, அக். 12:** தமிழ்நாட்டின் மாநிலவிலங்கான வரையாட்டைப் பாதுகாப்பதற்கான முன்னோடித் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் வியாழக்கிழமை தொடங்கி வைத்தார்.

தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில், வரையாடு குறித்த விழிப்புணர்வு புத்தகங்களை மாணவர்களுக்கு அவர் அளித்தார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்தி: வரையாடு என்று மக்களால் பரவலாக அழைக்கப்படும் நீலகிரி வரையாடு என்பது மேற்குத் தொடர்ச்சி மலையில் காணப்படும் அழிந்து வரும் இனமாகும். புவிசர்ப்பு விசைக்கெதிராக கடினமான குன்றின் மீது ஏறும் திறன்களுக்காக புகழ் பெற்ற வரையாடு தமிழ்நாட்டின் மாநில விலங்காகவும் திகழ்கிறது. இது 'மவுண்ட்டன் மோனார்க்' என்று அழைக்கப்படுகிறது. வரையாடு தொடர்பாக சங்க கால நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வரையாடு தினம்:** நீலகிரி வரையாடு இனம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 7-ஆம் தேதி வரையாடு தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. வரையாடுகள் குறித்த ஆய்வுகளில் முன்னோடியாக விளங்கும் டாக்டர் ஈ.ஆர்.சி. டேவிதாரின் பிறந்த நாள் அக்டோபர் 7 ஆகும். இதையொட்டியே வரையாடு விழிப்புணர்வு தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

வரையாடுகளின் எண்ணிக்கை, கணக்கெடுப்பு, நோய் கண்டறிதல் உள்பட பல்வேறு பணிகளை மேற்கொள்ள ரூ.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. வரையாடு திட்டப் பணிகளைச் செயல்படுத்த கோவையில் திட்ட அலுவலகமும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு முழு நேர திட்ட இயக்குநரும், நான்கு முதுநிலை ஆராய்ச்சியாளர்களும், மூத்த விஞ்ஞானியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக, பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய வரையாடு திட்டத்தை தலைமைச் செயலகத்தில் இருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வியாழக்கிழமை (அக்.12) தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், வனத் துறை அமைச்சர் எம்.மதிவேந்தன், தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, வனத் துறை கூடுதல் தலைமைச் செயலர் சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி, தலைமை வனப் பாதுகாவலர் வீ.நாகநாதன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



**தமிழ்நாட்டின் மாநில விலங்கான வரையாட்டை பாதுகாப்பதற்காக நீலகிரி வரையாடு திட்டத்தை தலைமைச் செயலகத்தில் வியாழக்கிழமை தொடங்கி வைத்த முதல்வர் மு.க ஸ்டாலின். உடன், வனத் துறை அமைச்சர் எம்.மதிவேந்தன், தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, வனத் துறை கூடுதல் தலைமைச் செயலர் சுப்ரியா சாகு உள்ளிட்டோர்.**

EVA STALIN

# மாற்றம் ஏற்படுத்தும் அச்சம்!

மாலத்தீவில் ஏற்பட்டிருக்கும் அரசியல் மாற்றம், இந்தியாவின் ராஜதந்திர நகர்வுகள் சரியாக இல்லாததால் ஏற்பட்டிருக்கும் சறுக்கல் என்றுதான் கூற வேண்டும். அண்டை நாடுகளின் உள்நாட்டு அரசியலில், சீனாவைப்போல நாம் கவனம் செலுத்தாமல் இருப்பதன் வெளிப்பாடுதான் மாலத்தீவில் ஏற்பட்டிருக்கும் அரசியல் மாற்றம்.

சுமார் 5.57 லட்சம் மக்கள்தொகை மட்டுமே கொண்ட மாலத்தீவின் மொத்த நிலப்பரப்பே 298 சதுர கி.மீ.தான். இந்துமகா சமுத்திரத்தில் அமைந்திருக்கும் இந்த நாடு, 1,200 தீவுகளை உள்ளடக்கியது. இந்தியாவின் மேற்கு கடற்கரையிலிருந்து 300 கடல் மைல்களும், லட்சத் தீவுப் பகுதியான 'மலிக்கு' என்று அழைக்கப்படும் மினிக்காய் தீவுகளிலிருந்து வெறும் 70 கடல் மைல் தூரத்திலும் இருக்கிறது மாலத்தீவு என்கிற நாடு.

இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளின் கடல்வழி வர்த்தகப் பாதையில் அமைந்திருப்பதால், மாலத்தீவுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்திக்கொள்வதில், தூர தேசமான அமெரிக்கா உள்பட எல்லா வல்லரசுகளும் முனைப்புக் காட்டுகின்றன. 1965-இல் பிரிட்டனிடமிருந்து விடுதலை பெற்ற மாலத்தீவில், 1968-இல் நடைபெற்ற முதல் தேர்தலில் 'பீப்பிள்ஸ் மஜ்லிஸ்' கட்சியின் தலைமையில் ஆட்சி அமைந்தது. அப்போது முதல் சமீப காலம் வரை, மாலத்தீவின் அரசியலும், வெளியுறவுக் கொள்கையும் பெரும்பாலும் இந்தியா சார்ந்ததாகவேதான் இருந்து வந்திருக்கின்றன. சீனாவில் ஷி ஜின்பிங்கின் தலைமை அமைந்தபிறகுதான், மாலத்தீவில் இந்தியாவுக்கு எதிரான அரசியல் உருவாகத் தொடங்கியது.

சமீபத்தில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் முகமது மூயிஸ் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். 2018 முதல் அதிபராக இருந்த முகமது சோலி இரண்டாவது சுற்றுத் தேர்தலில் ஆட்சியைப் பறிகொடுத்திருக்கிறார். ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடைபெறுகிறது என்பதும், அதனால் ஆட்சி மாற்றம் ஏற்படுகிறது என்பதும், ஆரோக்கியமான ஜனநாயகத்தின் அடையாளம் என்றுதான் நாம் பார்க்க வேண்டும்.

2009-இல் நடந்த அதிபர் தேர்தலில் முகமது நஷீதும், 2013-இல் அப்துல்லா யாமீனும், 2018-இல் இப்ராஹிம் முகமது சோலியும் அதிபர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நஷீத் இந்திய ஆதரவாளராகக் கருதப்பட்டவர் என்றால், அப்துல்லா யாமீன் முழுக்க முழுக்கத் தன்னைச் சீனாவின் ஆதரவாளராகவே மாற்றிக் கொண்டவர். அவரது ஆட்சிக் காலத்தில்தான், மாலத்தீவில் சீனா வலுவாகத் தடம் பதித்தது.

2018-இல் நடந்த தேர்தலில் அப்துல்லா யாமீனின் ஆட்சி அகற்றப்பட்டது மட்டுமல்ல, அவர் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக நீதிமன்றம் அவருக்கு 11 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதித்திருக்கிறது. அப்துல்லா யாமீன் ஆட்சியில் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தவர் இப்போது அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் முகமது மூயிஸ்.

சிறைத்தண்டனையில் இருக்கும் யாமீன் தேர்தலில் போட்டியிட முடியாது என்பதால், அவரது மக்கள் தேசிய காங்கிரஸ் கட்சி, முகமது மூயிஸின் மாலத்தீவு முன்னேற்றக் கட்சியுடன் கூட்டணி அமைத்து, அவருக்கு அதிபர் தேர்தலில் ஆதரவும் அளித்தது. தனது தேர்தல் வாக்குறுதியின்படி, முந்தைய சோலி அரசின் 'இந்தியா முதலில்' கொள்கைக்கு விடைகொடுத்து, மீண்டும் சீனாவுடனான நட்புறவுக்கு முன்னுரிமை அளிக்க அதிபர் மூயிஸ் முற்படுவார் என்பதில் சந்தேகம் இல்லை.

அதிபராக மூயிஸ் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் முன்னாள் அதிபர் யாமீன் வீட்டுச் சிறைக்கு மாற்றப்பட்டிருக்கிறார். தேர்தல் வாக்குறுதிப்படி, அவர் விடுவிக்கப்படுவாரா என்பது அடுத்த கேள்வி. முகமது மூயிஸின் வெற்றிக்குப் பின்னால் முன்னாள் அதிபர் அப்துல்லா யாமீனின் ஆதரவு இருந்ததால், யாமீன் புதிய அதிபர் மீதும், ஆட்சியிலும் எந்த அளவுக்கு ஆதிக்கம் செலுத்துவார் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அவரது தலையீடுகளை, அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் முகமது மூயிஸ் சகித்துக்கொள்வாரா என்கிற கேள்வி எழுகிறது.

முகமது சோலியின் தோல்விக்கு மிக முக்கியமான காரணமாக அமைந்தது, அவரது மாலத்தீவு ஜனநாயகக் கட்சியில் ஏற்பட்ட பிளவு. முன்னாள் அதிபர் முகமது நஷீதின் வேட்பாளர் 7.5% வாக்குகளைப் பிரித்ததால், முதல் சுற்றிலேயே முகமது சோலியின் வெற்றி முறியடிக்கப்பட்டது. இந்தியா தலையிட்டு, சோலிக்கும் நஷீதுக்கும் இடையே சமரசம் ஏற்படுத்தி இருந்தால், ஆட்சி மாற்றத்தைத் தடுத்திருக்க முடியும்.

மாலத்தீவில் சீனாவின் தலையீடும், முதலீடுகளும், ஆதிக்கமும் இந்தியாவுக்கு அச்சுறுத்தல்தான் என்றாலும், மாலத்தீவின் ஆட்சியாளர்களால் ஒரேயடியாக இந்தியாவைப் புறக்கணித்துவிடவோ, பகைத்துக் கொள்ளவோ முடியாது. 1989-இல் நடந்த கூலிப்படையினரின் தாக்குதலின் போதும், 2004 சுனாமியின்போதும், 2014 குடிநீர் தட்டுப்பாட்டின்போதும், 2020-21 கொவைட் 19 கொள்ளை நோய்த்தொற்றின் போதும் மாலத்தீவுக்கு உதவிக்கரம் நீட்டியது இந்தியாதான் என்பதை அந்த மக்கள் மறந்துவிட மாட்டார்கள்.

மாலத்தீவின் அரசியலில், அப்துல்லா யாமீனின் துணையுடன் சீனா 'இந்தியா எதிர்ப்பை' புகுத்தி இருந்தாலும், சீனாவின் கடன் வலையில் சிக்கிவிடக் கூடாது என்கிற உணர்வு இல்லாமல் இருக்காது. மாலத்தீவின் பொருளாதாரம் சுற்றுலாவை நம்பி இருக்கிறது. இந்தியாவைப் பகைத்துக் கொண்டால், சுற்றுலா பாதிக்கப்படும் என்பதையும் புதிய அதிபர் முகமது மூயிஸ் உணர்ந்தே இருப்பார்.

இந்தியா கவலைப்பட வேண்டியது மாலத்தீவின் ஆட்சி மாற்றத்திற்கல்ல, அங்கே பாகிஸ்தானின் ஆதரவால் அதிகரித்து வரும் மதத் தீவிரவாதத்திற்கு!

# விவசாயிகளின் பிரச்னைகள்

**ஐவி. நாகராஜன்**

உலகச் செய்திகள் குறித்து விவாதிக்கும் நாம் வேளாண்மை குறித்தும் விவசாயிகள் குறித்தும் சிந்திப்பதும் பேசுவதும் மிகக் குறைவாகவே உள்ளது. இந்தியா ஒரு விவசாய நாடு. இதன் 70 % மக்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ விவசாயத்தை நம்பியுள்ளனர். இந்தியாவின் பொருளாதாரத்தில் விவசாயம் 15.4 % அளவில் இருக்கிறது.

அண்மைக்காலமாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியில், தேசிய அளவிலும் மாநில அளவிலும் வேளாண்மையின் பங்கு குறைந்து கொண்டே வருகிறது. மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 1960-1961 ஆண்டில் விவசாயத்தின் பங்கு 42.46 % ஆக இருந்தது. இது 50 ஆண்டுகளில் வெகுவாகக் குறைந்துவிட்டது.

தமிழகத்தில் ஏறத்தாழ 40 % மக்களுக்கு, குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு வேளாண்மைத் தொழிலே பிரதான தொழிலாக இருந்து வருகிறது. நடப்பு நிதியாண்டில் 127 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியம் உற்பத்தி செய்ய தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது. அதனை உற்பத்தி செய்ய வேண்டியவர்கள் விவசாயிகள்.

விவசாயத்துக்குத் தேவையான தண்ணீர் பெறுவது இன்றைக்கு விவசாயிகள் எதிர்கொள்ளும் சிக்கல்களில் முக்கியமானது. நாம் காவிரி நீர் உரிமைக்காக கர்நாடகத்தைக் கெஞ்சிக்கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு, 1901-ஆம் ஆண்டிற்குப் பிறகு மிகவும் வறண்ட ஆகஸ்ட் மாதமாகும். மொத்தமுள்ள 150 நீர்த்தேக்கங்களில் நீர் சேமிப்பு கொள்ளளவைவிட சுமார் 38 % குறைவாகவே இருந்தது. தமிழகம் தண்ணீர் சேமிப்பில் பெரும் பற்றாக்குறையை எதிர்கொண்டிருக்கிறது.

மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் பங்கீடு பிரச்னை விவசாயிகளுக்குத் தேவையற்ற மன உளைச்சலை ஏற்படுத்துகிறது. விவசாய இடுபொருள்கள், விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் இவற்றின் விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளன. டிராக்டர்கள், பம்புகள் போன்ற விவசாய உபகரணங்களும் விலை உயர்விலிருந்து தப்பவில்லை.

அனுகூலமில்லாத சட்டங்கள், மானியங்களில் முறைகேடு, வங்கிகளில் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த இயலாமை, வெள்ளம், வறட்சி, மரபணு மாற்றப்பட்ட விதைகளின் பயன்பாடு, குறைந்த முதலீட்டால் குறையும் விளைச்சல் போன்றவையும் விவசாயிகள் துயரத்துக்குக் காரணங்களாக அமைகின்றன. இன்றைக்கு விவசாயிகள் ஒரு விநோதமான நெருக்கடியை எதிர்கொள்கிறார்கள். அதாவது, விவசாயப் பணிக்கு ஆள் கிடைக்காமல் திணறி வருவதாகச் சொல்கிறார்கள் விவசாயிகள்.

விவசாய வேலைக்கான ஆள் பற்றாக்குறையால் இருக்கும் நிலத்தில் முழுமையாகப் பயிரிடமுடியாமல் தவிக்கின்றோம் எனப் புலம்புகிறார்கள். இதனால் உற்பத்திப் பரப்புக் குறைகிறது. நாளுக்கு நாள் கிராமங்களில் இருந்து மக்கள் நகர்ப்புறங்களுக்கு இடம் பெயர்வது அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதற்கு நூறு நாள் வேலைத் திட்டம் மூலம் தீர்வு காணமுடியும் என்கிறார்கள்.

கிராமப்புறங்களில் வேலையின்றி, வருவாய் இன்றி அவதிப்படும் ஏழைகளுக்குக் குறைந்தபட்ச வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் நோக்கத்தில் இத்திட்டம் 2005-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. 2008-இல் நாடு முழுவதும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்தில் இணைவோருக்கு ஆண்டுக்கு 100 நாள்கள் வேலை வழங்கப்படுகிறது. இந்நாள்களில் சாலைகள், குளங்கள், கால்வாய்கள் போன்றவற்றைச் செப்பனிடுவது உள்ளிட்ட பணிகளில் அவர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

தொடக்க காலத்தில் ஒருவருக்கு ஒரு நாள் கூலி 80 ரூபாய் என்றிருந்தது. அது இப்போது 273 ரூபாயை எட்டியுள்ளது. கிராமப்புற ஏழை மக்கள் இத்திட்டத்தை வரவேற்கிறார்கள். நூறு நாள் வேலைத் திட்டத்தின் கீழ் 2021-22-ஆம் ஆண்டில் ஏறக்குறைய 2.92 கோடி பேர் வேலை செய்துள்ளனர். குறிப்பாக வேலைவாய்ப்பு இல்லாமல் முடங்கிய கரோனா காலகட்டத்தில், ஏழை கூலி விவசாயிகளுக்கு வாழ்வு கொடுத்தது இந்த நூறு நாள் வேலைத்திட்டம்தான்.

அதே நேரத்தில் நூறு நாள் வேலைத் திட்டத்தில் பதிவு செய்பவர்களில் பலர், களத்துக்கு வந்து வருகைப் பதிவு செய்துவிட்டு வேறு வேலைக்குச் சென்றுவிடுகின்றனர் என்ற புகாரும் உண்டு. இந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டதில் இருந்தே விவசாய வேலைக்கு ஆள் கிடைப்பதில்லை என விவசாயிகள் கூறி வருகின்றனர்.

மேலும், இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதில் போதிய கண்காணிப்பு இல்லை என்பதை மறுக்கமுடியாது. இந்தத் திட்டத்தை ஆய்வு செய்த ஊரக வளர்ச்சி, பஞ்சாயத்து ராஜ் பார்லிமெண்ட் நிலைக்குழுவும் தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தில் என்னென்ன வகையான பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை அந்தந்த கிராமசபையே தீர்மானிக்க வேண்டும். அந்தப் பணிகள் குறித்துக் கிராமசபை அவ்வப்போது சமூகத் தணிக்கை மேற்கொள்ள வேண்டும். நாடு முழுவதும் உள்ள சுமார் 2.50 லட்சத்துக்கும் அதிகமான கிராம பஞ்சாயத்துகளில் 2020-21-ஆம் ஆண்டில் 19 ஆயிரத்து 611 கிராம பஞ்சாயத்துகளில் மட்டுமே ஒரே ஒரு முறை சமூகத் தணிக்கை நடைபெற்றுள்ளது.

இதுபோன்ற தணிக்கையின் அறிக்கையும் பொதுவெளியில் வெளியிடப்படுவதில்லை. கோடிக்கணக்கான ரூபாய் வரிப் பணம் செலவழிக்கப்படும்போது அது எவ்வாறு செலவழிக்கப்படுகிறது என்பது மக்களுக்குத் தெரிய வேண்டாமா என்று நிலைக்குழு கேள்வி எழுப்பியிருக்கிறது. இந்நிலையில் விவசாயப் பணிக்கான ஆள் பற்றாக்குறையைப் போக்க, நூறு நாள் வேலைத் திட்டப் பணியாளர்களை விவசாயப் பணிகளுக்கு மாற்றம் செய்து கொள்ளலாம் என அரசு கூறியிருக்கிறது.

இதனால் தற்போது நூறு நாள் வேலைத் திட்டத்தில் ஈடுபடுவோரில் அதிகபட்சம் 10 % பேர் மட்டுமே விவசாயப் பணியில் ஈடுபடுகிறார்கள். நூறு நாள் வேலைத் திட்டத்தில் ஈடுபடுவோர் விவசாயப் பணிகளில் ஈடுபடுவது கட்டாயம் என அரசு விதிமுறை வகுக்க வேண்டும். அப்போதுதான் விவசாயப் பணிக்கு ஆள் பற்றாக்குறை நிலவுவதற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

# 'சரஸ்வதி சம்மான்' விருது எனது வாழ்வின் அர்த்தத்தை மேம்படுத்தியுள்ளது

## எழுத்தாளர் சிவசங்கரி நெகிழ்ச்சி

நமது நிருபர்

**புதுதில்லி, அக். 12:** 'சரஸ்வதி சம்மான்' விருதானது எனது வாழ்வின் அர்த்தத்தை மேம்படுத்தியுள்ளது என்று அந்த விருதைப் பெற்ற பிரபல தமிழ் எழுத்தாளர் சிவசங்கரி நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

எழுத்தாளர் சிவசங்கரிக்கு 2022-ஆம் ஆண்டுக்கான 'சரஸ்வதி சம்மான்' இலக்கிய விருது தில்லியில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கப்பட்டது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 8-ஆவது அட்டவணையில் இடம் பெற்றுள்ள 22 இந்திய மொழிகளில் ஏதேனும் ஒன்றில் சிறந்த இலக்கிய படைப்பாளிக்கு 'சரஸ்வதி சம்மான்' இலக்கிய விருது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் வழங்கப்படும் மிக உயரிய விருதுகளில் ஒன்றாகக் கருதப்படும் இவ்விருதை கே.கே.பிர்லா அறக்கட்டளை கடந்த 1991-ஆம் ஆண்டு முதல் வழங்கி வருகிறது. கடந்த 10 ஆண்டு காலத்தில் படைப்புகளை அடிப்படையாகக் கொண்டு இந்த விருதுக்கு எழுத்தாளர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

அந்த வகையில் 2022-ஆம் ஆண்டுக்கான 'சரஸ்வதி சம்மான்' இலக்கிய விருதுக்கு தமிழ் எழுத்தாளர் சிவசங்கரி தேர்வு செய்யப்பட்டிருந்தார். இந்த விருது வழங்கும் விழா தில்லி ஜன்பத்தில் உள்ள தேசிய அருங்காட்சியக கலையரங்கில் வியாழக்கிழமை மாலை நடைபெற்றது. இவ்விருதை 2014-இல் பெற்றவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான எம். வீரப்ப மொய்லி இந்த நிகழ்ச்சியில் எழுத்தாளர் சிவசங்கரிக்கு சரஸ்வதி சம்மான் விருது, ரூ.15 லட்சம் பரிசுத் தொகை, பாராட்டுப் பத்திரம், அறக்கட்டளையின் இலச்சினை ஆகியவற்றை வழங்கினார். நிகழ்ச்சியில் வீரப்ப மொய்லி பேசியதாவது:

சிவசங்கரியின் 'சூர்யவம்சம்-நினைவுகள்' எனும் நூலுக்கு இந்த விருது அவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. தமிழில் சிறந்த எழுத்தாளராகவும், இந்திய அளவில் புகழ்பெற்ற எழுத்தாளராகவும் விளங்குபவர். அதேபோன்று, 'இலக்கியம் மூலம் இந்திய பிணைப்பு' எனும் அவரது நான்கு தொகுதிகள் கொண்ட படைப்பானது, இந்திய நாகரிகத்தின் என்சைக்ளோபீடியாவாகவும், இந்தியாவுக்கான தொலைநோக்கை பிரதிபலிப்பதாகவும் உள்ளது.



தில்லியில் பிரபல எழுத்தாளர் சிவசங்கரிக்கு சரஸ்வதி சம்மான் விருதை வழங்கும் முன்னாள் மத்திய அமைச்சர் எம்.வீரப்ப மொய்லி. உடன் நீதிபதி அர்ஜுன் குமார் சிக்ரி உள்ளிட்டோர்.

சிவசங்கரியின் எழுத்தின் தாக்கம் உணர்வுபூர்வமிக்கவை. அவரது நோக்கமும், எழுத்தும் நாட்டின் அனைத்துத் தரப்பினரையும் நேசிப்பதாகவும், இனம் தலைமுறையினருக்கு நாட்டின் பன்முகத்தன்மை குறித்த பல்வேறு விஷயங்களை அறிந்துகொள்ளச் செய்வதாகவும் உள்ளன என்றார் அவர்.

இந்த நிகழ்ச்சியில் சரஸ்வதி சம்மான் விருது தேர்வுக் குழுவான சாயன் பரிஷத் தலைவர் - நீதிபதி அர்ஜன் குமார் சிக்ரி பேசுகையில், 'பல மொழிகளில் உள்ள படைப்புகளில் சிறந்த ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது எளிதல்ல. குழுவில் உள்ளவர்களிடம் சிவசங்கரியின் பெயரைக் கூறியவுடன் ஒவ்வொருவரும் அவருக்கு ஆதரவாக இருந்தனர்' என்றார் அவர்.

இந்நிகழ்ச்சியில் எழுத்தாளர் சிவசங்கரி ஏற்புரையாற்றியதாவது:

எனக்கு இன்றைய நாள் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட்ட நாளாகும். நான் உண்மையாக ஆசீர்வதிக்கப்பட்டுள்ளேன். ஒவ்வோர் இந்திய எழுத்தாளரின் கனவாக 'சரஸ்வதி சம்மான் விருது' உள்ளது. அந்த விருது எனக்குக் கிடைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி. இதற்காக, கே.கே. பிர்லா அறக்கட்டளை உள்பட அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் 56 ஆண்டுகளாக எழுத்துப் பணியில் உள்ளேன். தமிழ் இலக்கியத்தின் பல்வேறு தளங்களில் பங்களிப்பு அளித்துள்ளேன்.

பல்வேறு கலந்துரையாடல்களில் என்னிடம் கேட்கப்படும் கேள்வியானது, எது நல்ல இலக்கியம் என்பதாகும். நல்ல இலக்கியம் என்பது வாசகரின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தி, ஆக்கபூர்வமான வகையில் அவரைச் சிந்திக்கத் தூண்டி, செயலில் இறங்க வைப்பதாகும்.

கண்ணாடியில் முகத்தைப் பார்ப்பதுடன், நமது அழகை சீர்படுத்திக் கொள்வதுபோல, நல்ல இலக்கியமானது, சமூகத்தைப் பிரதிபலிப்பது மட்டுமின்றி, சமூகம் அதன் குறைபாடுகளையும், பிரச்னைகளையும் உணர்ந்து கொள்ளவும் அதைச் சீர் செய்வதற்கு கருவியாகவும் இருக்க வேண்டும் என்பதுதான் என் நம்பிக்கை.

சமூகத்திடம் இருந்து நாம் நிறையவே பெறுகிறோம். அதற்கு எந்த வகையிலாவது கைம்மாறு செய்ய வேண்டும். அதன் ஒரு வடிவமாக நான் எழுதுதலைப் பார்க்கிறேன். நான் பகிர்ந்து கொள்வதற்காக எழுதுகிறேன்.

ஏனெனில், நான் அக்கறையுடன் இருக்கிறேன். இந்த விருதானது எனது வாழ்வின் அர்த்தமுள்ளதாகும். உயிருடன் நாம் வாழும் போது அர்த்தமுள்ள செயல்களைச் செய்து, வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கிக்கொள்ள வேண்டும். இதைத்தான் எனது வாழ்வில் செய்ய நான் முயற்சி செய்கிறேன். இந்த கௌரவமிக்க விருதானது எனது வாழ்வின் அர்த்தத்தை மேம்படுத்தியிருக்கிறது என்றார் அவர்.

இந்த நிகழ்ச்சியில் ஹிந்துஸ்தான் டைம்ஸ் இயக்குநர் பிரியவ்ரத் பார்தியா வரவேற்றார். கே.கே. பிர்லா பவுண்டேஷன் இயக்குநர் நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியில் எழுத்தாளர் மாலன், தில்லி தமிழ்ச் சங்கத் தலைவர் சக்தி பெருமாள், பொதுச் செயலர் இரா. முகுந்தன் மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டனர்.